# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

ந.க. 3799 / 1426 / சி 1 (2) நாள் 14.02.2018

## வேலைவாய்ப்பு அறிவிப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருச்கோயிலில் கீழ்க்குறிப்பிட்ட காலி பணியிடங்களுக்கு இந்து மதத்தைச் சார்ந்த தகுதியானவர்களை நேர்காணல் மூலம் தேர்வு செய்து இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்கு உட்பட்டு பணி நியமனம் செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு **15.03.2018 மாலை 5.00 மணிக்குள்** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| | பதவிப் பெயர் | ஊதிய விகிதம் | காலி பணியிடங்கள் எண்ணிக்கை | குறைந்த பட்ச தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1 | உதவி மின் பணியாளர் | 4100 – 10000 + தர ஊதியம் 1600 | 1 (ஒன்று) | Must have Industrial Training Institute (I.T.I) certificate in Electical trade issued by Government / Government Recognized Instution. |
| 2 | குழாய் இணைப்பு பணியாளர் | 4100 – 12300 + தர ஊதியம் 1800 | 1 (ஒன்று) | Must have Industrial Training Institute (I.T.I) certificate in Plumber trade issued by Government / Government Recognized Instution. |
| 3. | இளநிலை பொறியாளர் (மின்) | 8300 – 24900 + தர ஊதியம் 3600 | 1 (ஒன்று) | Must possess a Diploma in Electrical Engineering or Electrical & Electronics Engineering. |
| 4. | ஓட்டுநர் | 5200 – 15900 + தர ஊதியம் 2000 | 1 (ஒன்று) | பத்தாம் வகுப்பு தேர்ச்சி போதுமானது. Must possess light vehicle or Heavy vehicle Driving licence issued by competent authority. |
| 5 | கணினி இயக்குபவர் (இளநிலை உதவியாளர் நிலை) | 5200 – 15900 + தர ஊதியம் 2000 | 2 (இரண்டு) | Must possess a Diploma in computer science issued by Government / Government Recognized Instution. |

திருக்கோயிலால் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவம் மற்றும் இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

**srirangam.org** இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**வேணு ஸ்ரீனிவாசன்**
அறங்காவலர் குழுத் தலைவர்

**பொ. ஜெயராமன்,**
இணை ஆணையர் / செயல் அலுவலர்

திரு. கே.என். ஸ்ரீனிவாசன்,
அறங்காவலர்

திருமதி கவிதா ஜெகதீசன்
அறங்காவலர்

திரு. எஸ்.டி. ரெங்காச்சாரி,
அறங்காவலர்

திரு.வெங்கடேச உத்தமநம்பி
சுழல்முறை அறங்காவலர்

# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

## ____________________ பணிக்கான விண்ணப்பப் படிவம்

| வ. எண். | விபரம் | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தகப்பனார் பெயர் | : | |
| 3. | முகவரி (சான்றுடன்) | : | |
| | தொலைபேசி எண் | : | |
| | அலைபேசி எண் | : | |
| | மின்னஞ்சல் முகவரி | : | |
| 4. | பிறந்த நாள் – வயது (சான்றுடன்) | : | |
| 5. | கல்வித் தகுதி (சான்றுடன்) | : | |
| 6. | வாக்காளர் / ஆதார் அடையாள அட்டை நகல் | : | |
| 7. | உடற்தகுதிச் சான்று (மருத்துவரிடம் பெறப்பட வேண்டும்) | : | |
| 8. | நன்னடத்தைச் சான்று (இரண்டு) (**“A”** அல்லது **“B”** கிரேடு அலுவலர்களிடமிருந்து பெறப்பட வேண்டும்) | : | |
| 9. | முன் அனுபவம் (கடந்த ஐந்து ஆண்டுகளில் பணிபுரிந்த இடங்களில் பெற்று வழங்கப்படவேண்டும்) | : | |
| 10. | இதர தகுதிகள் (சான்றுடன்) | : | |

திருக்கோயிலால் வெளியிடப்பட்டுள்ள வேலைவாய்ப்பு அறிவிப்பில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளை நான் நன்கு தெரிந்து கொண்டேன் எனவும், நான் இந்து மதத்தைச் சார்ந்தவர் என்றும், மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதி அளிக்கின்றேன்.

நாள் :

விண்ணப்பதாரர் கையொப்பம்.

# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

ந.க. 3799 / 1426 / சி1 (1) / நாள் 14.02.2018

## உதவி மின் பணியாளருக்கான தகுதிகள் (Electrical Assistant)

1. உதவி மின் பணியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. தமிழ்நாடு அரசு தொழில் பயிற்சி நிறுவனம் / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து மின் பணிகள் தொடர்பான கல்வியில் (I.T.I Electrician) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
3. Tamilnadu Electrical Licencing Board மூலம் வழங்கப்படும் “ B ” உரிமம் பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
4. மேற்படி பணியில் முன்அனுபவத்திற்கான சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

## குழாய் இணைப்பு பணியாளருக்கான தகுதிகள் (Plumber)

1. குழாய் இணைப்பு ( Plumber ) பணியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. தமிழ்நாடு அரசு தொழில் பயிற்சி நிறுவனம் / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து குழாய் பணிகள் தொடர்பான கல்வியில் (I.T.I Plumber) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
3. மேற்படி பணியில் முன்அனுபவத்திற்கான சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

## இளநிலை மின் பொறியாளர் (மின்) பணியாளருக்கான தகுதிகள் (Junior Electrical Engineer)

1. இளநிலை பொறியாளர் (மின்) பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் தமிழ்நாடு அரசு நிறுவனம் / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து மின் பொறியியல் படிப்பில் பட்டய படிப்பு (Diploma in Electrical and Electronics Engineering) அல்லது மின் மற்றும் மின்னணு பொறியியல் படிப்பில் (Electrical and Electronics Engineering) தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. Tamilnadu Electrical Licencing Board மூலம் வழங்கப்படும் “ C ” உரிமம் பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
3. மேற்படி பணியில் முன்அனுபவத்திற்கான சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

## ஓட்டுநர் பணியாளருக்கான தகுதிகள் (Driver)

1. ஓட்டுநர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுனர் உரிமம் பெற்றவராகவும், சரக்குந்து மற்றும் பயணியர் வாகனம் ஓட்டுவதில் உரிய அனுமதி ( Badge ) பெற்றிருக்க வேண்டும்.
3. ஓட்டுனர் உரிமம் உயிர்ப்புடன் ( live ) இருக்க வேண்டும்.
4. மேற்படி பணியில் முன்அனுபவத்திற்கான சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
5. கண் மருத்துவ சான்று இணைக்கப்பட வேண்டும்.

## கணினி இயக்குபவர் பணிக்கான தகுதிகள்

1. கணினி இயக்குனர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் தமிழ்நாடு அரசு நிறுவனம் / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து கணினி அறிவியலில் பட்டயப் (Diploma in Computer science) படிப்பில் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். கூடுதலாக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை தட்டச்சு தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.
2. தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு பணியில் முன்அனுபவத்திற்கான சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

## பொதுவான தகுதிகள்

1. இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
2. மேற்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் நன்கு ஆரோக்கியமான உடல் நிலையுடன், தீயபழக்க வழக்கங்கள் மற்றும் தொற்று நோயற்றவர் என்றும், நல்ல மனநிலை உடையவர் என்பதற்கான விபரங்கள் குறிப்பிட்டு மருத்துவர் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
3. **01.02.2018 அன்று 18 வயது பூர்த்தி** அடைந்தவர்களாகவும், **45 வயதிற்கு உட்பட்டவர்கள்** மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
4. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள், குற்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள், ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து விலக்கப்பட்டவர்கள், தீர்ப்புக் கடனாளிகள் ஆகியோர் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.
5. திருக்கோயில் நிர்வாகத்தால் பிரசுரம் செய்யப்பட்ட மாதிரி விண்ணப்பங்களின்படி மட்டுமே பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.
6. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பப் படிவத்தில் விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்றுகள் இணைக்கப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இணைக்கப்படும் சான்றுகளில் சான்றொப்பம் (Attested Xerox copies only) பெற்று அனுப்பப்பட வேண்டும்.
8. **15.03.2018**ந்தேதி மாலை **5.00** மணிக்குள் வரும் விண்ணப்பங்களை பரிசீலித்து தகுதியான நபர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கு அழைப்பு அனுப்பப்படும். நேர்காணலுக்கு விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட நாளில் / நேரத்தில் தனது சொந்த செலவில் / பொறுப்பில் அனைத்து அசல் சான்றுகளுடனும் ஆஜராக வேண்டும். எவ்வித காலதாமதமோ / காரணங்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
9. விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன், அஞ்சல் உறையில் **“____________________ பணியிடத்திற்கான விண்ணப்பம்”** என தெளிவாக குறிப்பிட்டு **“இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 620 006.”** என்ற முகவரிக்கு நேரிலோ / அஞ்சல் மூலமாகவோ, சுயவிலாசமிட்ட உறையுடன் அனுப்ப வேண்டும்.
11. தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் இத்திருக்கோயிலின் உபகோயில்களுக்கும் மற்றைய பணிகளுக்கும் பணியிட மாறுதல் செய்யப்படுவார்.
12. விண்ணப்பதாரர் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கு உட்பட்டும், திருக்கோயிலில் தொன்று தொட்டு கடைபிடிக்கப்படும் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் மற்றும் திருக்கோயில் நிர்வாகத்தினரால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டும் பணிபுரிய கடமைப்பட்டவர் ஆவார்.
13. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதி அளிக்க வேண்டும், தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்தும், சட்டரீதியான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
14. இதர விபரங்களை அலுவலக வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

**இணை ஆணையர் / செயல் அலுவலர்.**